2011 பிப்ரவரி 8]

(ஆ) மேட்டூர் அணைக்குள் கர்நாடக அரசு அத்துமீறி நீரேற்று நிலையம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேட்டூர் அணைக்குள் கர்நாடக அரசு அத்துமீறி நீரேற்று நிலையம் அமைத்து வருவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், அ.இ.அ.தி.மு.க. சார்பாக திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. எல். ரவிச்சந்திரன், திரு. கே.பி. அன்பழகன் ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன் ஆகியோரும், ம.தி.மு.க. சார்பாக டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ் ஆகியோரும் பேரவை விதி 56-ன்கீழ் ஒத்திவைப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். தகவல் கோரல் என்ற முறையில் இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் எல்லையிலுள்ள பாலாற்றிலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் கர்நாடக மாநிலம், கொள்ளேகால் தாலுகாவிலுள்ள மாதேஸ்வரன் மலைக்குக் குடிநீர் விநியோகம் செய்வதற்காக, கர்நாடக அரசு மாதேஸ்வரன் மலையிலிருந்து வனப் பகுதி வழியாக 18 கிலோ மீட்டர், பாலாற்றிலிருந்து 18 கிலோ மீட்டர் வரையிலும், அங்கிருந்து கோபிநத்தம் வழியாக எண்ணூர்-கண்டூர் 4 கிலோ மீட்டர் பகுதி வரையிலும் குடிநீர்க் குழாய்களைப் பதித்துள்ளது என்ற செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

மேட்டூர் அணை கட்டும் பணி 1925 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, 1934 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. ஒகேனக்கல் முதல் மேட்டூர் வரை உள்ள காவிரி ஆற்றுப் படுகை முழுக்க முழுக்க தமிழகத்திற்குச் சொந்தமானது. அணையைக் கட்டுகின்றபோது 130 அடி உயரமும், 110 டி.எம்.சி. நீரும் சேமிக்கும் வகையில் மேட்டூர் முதல் ஒகேனக்கல் வரை நிலம் கையகப்படுத்தப்பட்டது. ஆனால், 120 அடி உயரம் நீரைச் சேமிக்கும் அளவுக்கு மட்டுமே அணை கட்டப்பட்டது. நீர் மட்டம் 120 அடியை எட்டுகின்றபொழுது, மேட்டூர் முதல் ஒகேனக்கல் வரை 152 சதுர

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2011 பிப்ரவரி 8

கிலோ மீட்டர் பரப்பளவில் தண்ணீர் தேங்கி நிற்கும். எனவே, தற்போது 120 அடி நீர் தேங்கி நிற்கும் பரப்பளவு மட்டுமின்றி பாலாறு முதல் ஒகேனக்கல் வரை தமிழகப் பொதுப் பணித் துறைக்கே சொந்தமானது. மேட்டூர் அணையின் நீர்ப் பரப்புப் பகுதியில் 15 மீட்டர் வரை மண் ரோடு போட்டுள்ள கர்நாடக அரசு, தற்போது காவிரியின் மையப் பகுதிவரை ரோடு போடும் பணியை மேற்கொண்டிருக்கிறது. தற்போது கர்நாடக அரசு மேற்கொண்டிருக்கின்ற ரோடு போடும் பணி, pumping station அமைக்கின்ற பணி அனைத்துமே மேட்டூர் அணைக்கு உட்பகுதியில்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆக, குறைந்த அளவு நீர் வந்தாலும், அதனைத் தடுத்து குடிநீர் எடுக்கின்ற ஒரு சூழ்நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, காவிரி நீர்ப் பிரச்சினையில் காவிரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டது. இடைக்காலத் தீர்ப்பில் 205 டி.எம்.சி. என்ற அந்தத் தீர்ப்பு இருக்கின்றது. ஆனால், இறுதித் தீர்ப்பில் 192 டி.எம்.சி. தமிழகத்திற்கு வழங்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதில் 7 டி.எம்.சி. நீரை நாம் பாண்டிச்சேரிக்கு வழங்க வேண்டும். ஆக, இறுதித் தீர்ப்பு பெறப்பட்ட அந்தச் சூழ்நிலையில், முதலில் மாண்புமிகு இதய தெய்வம், முன்னாள் முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெறப்பட்ட இறுதித் தீர்ப்பினை உறுதி செய்கின்ற வகையில் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசினுடைய Gazette-இல் முதலிலே வெளியிடச் செய்யுங்கள்; அதற்குமேல் மாநிலங்களுக்கு இடையிலேயான நதிநீர்ப் பிரச்சினைச் சட்டம் 1956-இல் கண்டுள்ளபடி, பிரிவு 6-இன்படி மத்திய அரசு அந்த இறுதித் தீர்ப்பில் வெளியிட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிக்கையின் வாயிலாகச் சொன்னார்கள். அதோடு மட்டுமல்லாமல், மத்திய அரசு நதிநீர் ஆணையம் மூலமாகக் கண்காணிப்புக் குழுவின் தீர்ப்பில் உள்ளபடி அமைப்பதற்கு மத்திய அரசில், இன்றைக்கு ஆட்சியில் இருக்கின்ற தமிழக அரசு, அங்கே கூட்டணி மந்திரிசபையில் இருக்கின்ற காரணத்தால் தங்களுடைய செல்வாக்கினைப் பயன்படுத்தி அந்தத் தீர்ப்பை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு முதலில் ஏற்பாடு செய்யுங்கள். பின்னர், நம்முடைய உரிமையாக நாம் கேட்டது 356 டி.எம்.சி. நீர். அவர்கள்

2011 பிப்ரவரி 8] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வழங்கியது 192 டி.எம்.சி. நீர். இந்த நீர் போதாது என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவேன் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். ஆனால், காவிரி நடுவர் மன்றம் வழங்கிய இறுதித் தீர்ப்பின்மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு நடைமுறைக்கு வரும்வரை, இடைக்காலத் தீர்ப்பு அமலில் இருக்கும் என்று அந்த இறுதித் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. இடைக்காலத் தீர்ப்பும் இன்று நடைமுறையில் இல்லை என்றே சொல்லலாம். அந்த அளவிற்கு இன்றைக்குக் காவிரி நதிநீரைப் பெறுவதில், நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு மெத்தனப் போக்கையே கடைப்பிடித்து வருகின்ற சூழ்நிலை இருக்கின்ற நிலையில், மேற்கொண்டும் மேட்டூர் அணையின் உட்பகுதியில் ரோடு அமைக்கின்ற பணியும், குடிநீர் எடுப்பதற்கு பம்பிங் ஸ்டேஷன் அமைக்கின்ற பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இது தமிழக மக்களையும், காவிரிப் நதிநீரின் மூலமாக விவசாயம் பெறுகின்ற 9 மாவட்ட மக்களையும், காவிரிப் படுகையிலிருந்து காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் பெறுகின்ற கிட்டத்தட்ட 15, 18 மாவட்ட மக்களையும் மிகப் பெரிய வருத்தத்தில் ஆழ்த்தியிருக்கிறது என்ற தகவலை இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, கர்நாடக அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்த அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற தகவலைத் தெரிவிக்குமாறு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய, இந்த சபையினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசு நம்முடைய மேட்டூர் அணையிலிருந்து 22 கிலோ மீட்டர் தூரத்திற்கு பைப் லைனை அமைத்து, பம்பிங் ஸ்டேஷனை அமைத்து, ரோடு போட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலை என்பது, வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. நம்முடைய எல்லையிலிருந்து கர்நாடக அரசு இப்பொழுது பெரிய பெரிய பைப்களைப் புதைத்து, நீர் எடுக்கக்கூடிய நிலையை நம்முடைய*

[திரு. சி. ஞானசேகரன்] [2011 பிப்ரவரி 8

அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதெல்லாம், இப்படிச் சட்டத்தை மீறி, நம்முடைய எல்லைக்கு உள்ளேயே வந்து, இவ்வளவு கட்டடப் பணிகளை மேற்கொண்டிருகிற, பைப்களையெல்லாம் புதைத்துக் கொண்டிருக்கிற, தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்க முயன்று கொண்டிருக்கிற, 9 மாவட்ட மக்களுடைய ஜீவாதாரப் பிரச்சினையில் கைவைத்துக் கொண்டிருக்கக்கூடிய கர்நாடக அரசு—அங்கேயேகூட, யார் தவறு செய்கிறார்களோ அவர்களை நம்மால் கைது செய்ய முடியாதா? அவர்களை ஏன் நாம் விட்டுவைக்க வேண்டும்?

இதுமட்டுமல்ல; ஒவ்வொரு மாநிலமும் இப்பொழுது நம்மை—ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே குப்பத்தில் அணை கட்ட முற்பட்டிருக்கிறது. முல்லைப் பெரியாறு அணையைப் பார்த்தோம் என்று சொன்னால், அவர்கள் புதிதாக அணை கட்டுவோம் என்று உச்ச நீதிமன்றத்தினுடைய வழிமுறைகளையும், விதிமுறைகளையெல்லாம் மீறிச் செய்து கொண்டிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்திருக்கிற, அவர்களோடு தோழமையாக இருந்து கொண்டிருக்கக்கூடிய நம்முடைய பிரதான எதிர்க்கட்சியும் அந்தப் பிரச்சினையைக் கிளப்பி, நம்மையெல்லாம் இப்படிச் சுற்றிச் சுற்றி அடித்துக் கொண்டிருக்கிற, அது கேரள அரசாக இருந்தாலும் சரி, ஆந்திர அரசாக இருந்தாலும் சரி, கர்நாடக அரசாக இருந்தாலும் சரி, தமிழர்களுடைய உரிமையைப் பறிக்க அவர்கள் முற்படுவார்களேயானால், அவர்களை நிச்சயமாக நாம், கட்சி பாரபட்சமின்றி, எல்லோரும் ஒருமித்த குரலில் கண்டிக்க வேண்டிய தலையாய பொறுப்பு நமக்கு இருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இன்று விதிமுறைகளை மீறி, சட்டத்தை மீறி பைப் லைனைப் புதைத்துக் கொண்டிருக்கிற கர்நாடக அரசை எப்படி நாம் தடுத்து நிறுத்தப் போகிறோம்? இதற்கு உச்ச நீதிமன்றத்திலே ஏதாவது ஒரு வழக்குத் தொடுத்து, அதற்கான தடையாணையைப் பெறுவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறதா? அதேபோல, முல்லைப் பெரியாறு அணையில் புதிய அணை கட்டுவதற்கு கேரள அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது. அந்த முயற்சிக்குத் தடை போடவும் நம்முடைய அரசு ஏதாவது உச்ச நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2011 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர்-ஒகேனக்கல்லுக்கு இடையில் கர்நாடக மாநில அரசு பைப் லைன் பதித்து, பம்பிங் ஸ்டேஷன் அமைத்துக்கொண்டு, சாலை வசதிகளை ஏற்படுத்திக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஏற்கெனவே, தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய தண்ணீரைத் தடுக்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ற கர்நாடக அரசு, இங்கே வந்து தேங்கி நிற்கின்ற தண்ணீரையும் திருப்பி தமது மாநிலத்திற்கு எடுத்துச் செல்ல முயல்வது வேதனைக்குரிய விஷயமாகும். இதை உடனடியாக நாம் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையெனில் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று தெரிவித்து, கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசு, மாதேஸ்வரன் மலைப் பகுதிக்குக் குடிநீர் விநியோகம் செய்ய மேட்டூர் அணையின் நீர்ப் பரப்புப் பகுதியிலிருந்து நீரேற்று நிலையம் அமைத்து, தண்ணீர் எடுக்கும் பணியைத் தொடங்கியுள்ளது எனவும், இதற்காக கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பாலாறு, செங்கப்பாடி செல்லும் பாதையில் அமைந்துள்ள பொங்கன்குண்டு என்ற இடத்தில், காவிரிக் கரையில் இந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு நீரேற்று நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்து இதற்கான அடிப்படைப் பணிகளை கர்நாடக அரசு தீவிரப்படுத்தியுள்ளது என்றும், 21 கிலோ மீட்டர் தூரத்திற்கு குழாய் பதிக்கும் பணி இறுதிக் கட்ட நிலையிலுள்ளது என்றும், இத்திட்டம் 24.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளதாகவும், இதில் 50 சதவீதம் மாதேஸ்வரன் மலைக் கோயில் நிர்வாகமும், மீதித் தொகையை கர்நாடக அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது எனவும், நீரேற்று நிலையம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடம் கர்நாடக மாநிலத்திற்குள் இருந்தாலும் அது மேட்டூர் அணையின் நீர்ப் பரப்புப் பகுதியில் அமைந்துள்ளது*

எனவும், நீரேற்று நிலையத்திற்கான மண் சாலை அமைக்கும் பணி மற்றும் நீரேற்று நிலையம் அமையும் இடத்திலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்திற்குக் குடிநீர் குழாய் அமைக்கும் பணி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது எனவும் செய்திகள் வந்துள்ளன. இவ்வாறு செய்திகள் வந்ததையடுத்து, 28-1-2011 அன்று தல ஆய்வு செய்த தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரத் துறைப் பொறியாளர்கள் பின்வருமாறு தெரிவித்தனர்:

"மேட்டூரிலிருந்து சுமார் 22 கிலோ மீட்டர் தூரத்தில் கர்நாடக மாநில எல்லையில் பாலாறு, காவிரியில் கலக்கும் இடத்திலிருந்து காவிரி ஆற்றின் மேற்குக் கரையிலுள்ள கோபிநத்தம் செல்லும் வழியில் மூன்றாவது கிலோ மீட்டர் தூரத்தில் பொங்கன்குண்டு என்ற இடத்தில் கர்நாடக எல்லைக்குள் காவிரி ஆற்றின் கரையில் குடிநீர்த் திட்டத்திற்காக நீரேற்று நிலையம் அமைக்க மண் சாலை அமைத்துவரப்படுகிறது. இப்பணியானது காவிரி ஆற்றிலிருந்து 27 கிலோ மீட்டர் தூரத்தில் மலைப் பகுதியில் மாதேஸ்வரன் கோயில் இருக்கும் இடத்திற்குக் குடிநீர் வழங்கும்பொருட்டு செய்யப் படுவதாக கர்நாடகக் குடிநீர் வாரிய உதவி செயற் பொறியாளர்மூலம் தொலைபேசியின் வாயிலாக அறியப்பட்டது. பாலாறு எல்லையில் கோபிநத்தம் சாலை ஓரமாக உள்ள வனப் பகுதியில் ஆங்காங்கே 200 மில்லி மீட்டர், எட்டு அங்குலம் விட்டம் கொண்ட இரும்புக் குழாய் கொண்டு பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. காவிரிக் கரையோரமாக மண் பாலம் அமைக்கும் பணி மட்டுமே நடைபெற்று வருகிறது என்று அவர்கள் தெரிவித்துள்ளார்கள்".

கர்நாடக மாநிலத்தின் காவிரிப் படுகையில் நகர மற்றும் ஊரக மக்களின் மொத்த குடிநீர்த் தேவை 17.22 டி.எம்.சி. என காவிரி நடுவர் மன்றம் அதன் இறுதி ஆணையில் மதிப்பீடு செய்துள்ளது. அதன்படி குடிநீர்த் தேவைக்கான நீரில் 50 விழுக்காடு நிலத்தடி நீரினாலும், மீதம் உள்ள 50 விழுக்காடு மேற்பரப்பு நீரினாலும் பயன்படுத்திக்கொள்ளக்கூடும் என்ற ஊகத்தின் அடிப்படையில் வழங்கக்கூடிய நீர் அளவு 8.75 டி.எம்.சி.ஆக இருக்கும். மக்கள்தொகை மற்றும் கால்நடை போன்றவற்றிற்கான பயனீட்டு அளவு மொத்த நீர் அளவில் 20 விழுக்காடு, அதாவது 1.75 டி.எம்.சி. எனக் காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாதேஸ்வரன் மலைப் பகுதி கர்நாடகக் காவிரிப் படுகையில் அமைந்துள்ளது. இப்பகுதி மக்களின் குடிநீர்த் தேவையும், மேலே

குறிப்பிட்டுள்ள தேவையில் அடங்கும். இதுகுறித்து விரிவான தகவலை அளிக்கும்படி 4-2-2011 ஆம் தேதியிட்ட கடிதத்தில் கர்நாடக அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. நீர்வள ஆதாரத் துறைப் பொறியாளர்கள் மீண்டும் தல ஆய்வு மேற்கொண்டு உடன் விவரங்களை அளிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமையை விட்டுக் கொடுக்காமலும், தமிழக விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திடவும் இவ்வரசு முனைந்து செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, குடிநீருக்காக தண்ணீர் அளிக்கின்ற உரிமையைக் காவிரி நடுவர் மன்றம் அளித்திருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் அவர்களுடைய எல்லையிலிருந்துதான் குடிநீருக்காக, மாதேஸ்வரன் பகுதிக்கான குடிநீரை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது ஒகேனக்கல்லிலிருந்து குடிநீரை வேலூர் மாவட்டம் வரை கொண்டு வருவது என்பது நமக்கு மத்திய அரசாங்கத்தின் மூலமாகவே, நடுவர் மன்றத்தின் மூலமாகவே அறிவிக்கப்பட்டிருக்கிற உரிமை. நாமும் ஒகேனக்கல்லிலிருந்து தண்ணீர் எடுத்து வருகிறபோது அவர்களும் இதுமாதிரி ஆர்ப்பாட்டம் எல்லாம் செய்தார்கள். அதனால், நம்மைப் பொறுத்தவரையில் குடிநீருக்கு மட்டும்தான் அவர்கள் தண்ணீர் எடுக்கிறார்கள் என்று சொன்னால், அதை நடுவர் மன்றத் தீர்ப்பின்படி எதிர்க்க முடியாது. ஆனால், அதுபற்றிய முழு விவரங்களையும் அரசு மூலமாக அறிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு அவர்களுக்குக் கடிதத்தையும் எழுதியிருக்கிறது. அதனுடைய விவரங்கள் வரப்பட்ட பிறகு அதனுடைய நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும். இங்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். காவிரி ஆற்றைப் பொறுத்தவரையில் 205 டிஎம்சி. நீரைப் பெறுவதிலே தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி என்றும் தொடர்ந்து அதற்கான வழிமுறைகளைக் கண்டுகொண்டுதான் இருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை.

முற்பகல் 11-05

அதேபோல, திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்ட முல்லைப் பெரியாறு விவகாரம் பற்றிய செய்தியில்,

[டாக்டர் க. பொன்முடி] [2011 பிப்ரவரி 8

திரு. ஆனந்த் என்பவருடைய தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் முடிவு சொல்லப்படுவதற்கு முன்பாகவே கேரள அரசாங்கம் ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறது. அதையும் எதிர்த்து—Interlocutory Application-இடைக்கால மனு செய்வதற்கு, உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதென்று தலைவர் கலைஞர் அவர்கள் முடிவு செய்து, அதற்கான ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது என்பதையும் நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர், அவருக்கு மாற்றாக திரு. இரா. இராம்பிரபு. (குறுக்கீடு) மற்றவையெல்லாம் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம், உட்காருங்கள்.

திரு. இரா. இராம்பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009-2011-ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து ஆறாவது முதல் இருநூற்று முப்பத்து எட்டாவது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009-2011-ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்தொன்றாவது முதல் நூற்று எழுபத்து மூன்றாவது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.